**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

அசல் வழக்கு எண். 13/2021

நாள் : 14.02.2023

பி.வா.சா.3 திரு. முகம்மது அல்தாப் உசேன் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

06.03.2019 அன்று உயிலில் நான் சாட்சி கையொப்பம் போட்டேன். அன்றைய தினம்தான் மற்ற அனைவரும் உயிலில் கையொப்பம் செய்தார்கள். உயில் தயார் செய்ய யார் பத்திரம் வாங்கினார்கள் என்று சொன்னால் பத்திரத்தில் எழுதப்படவில்லை பச்சை பேப்பரில்தான் உயில் தயார் செய்யப்பட்டது. உயிலில் கையொப்பம் செய்த மற்றொரு சாட்சி உயில் பத்திரத்தில் தயார் செய்யப்பட்டது என்று கூறியிருந்தால் அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண் 164/10 டி–யில் உள்ள 7.1/2 செண்ட் புஞ்சை நிலம் சம்பந்தமாக உயில் எழுதப்பட்டது. காலை சுமார் 11.00 மணியளவில் வழக்கறிஞரின் வீட்டிற்கு சென்றோம். கிழமை சரியாக நினைவில்லை புதன்கிழமையாக இருக்கலாம். ரெஜினாபீவி விபரத்தை கூற வழக்கறிஞரின் அலுவலகத்தில் இருந்த டைபிஸ்ட் உயிலை தயார் செய்தார். உயில் தயார் செய்யும்போது ஆவணம் எதுவும் கேட்டார்களா என்று எனக்கு ஞாபகம் இல்லை. என்னை அடையாளப்படுத்துவதற்கு நான் எதுவும் ஆவணங்கள் கொடுக்கவில்லை. ஆதார் கார்டு கொடுத்தேனா என்று ஞாபகம் இல்லை. ரெஜினாபீவியும் தன்னை அடையாளப்படுத்துவதற்கு ஆவணங்கள் கொடுத்தாரா என்று எனக்கு நினைவில்லை. நபிசத்து தாஹிராவும் அங்குதான் இருந்தார். அவரிடம் கையொப்பம் எதுவும் பெறவில்லை. வழக்கறிஞர் நடராஜனின் வீடும் அலுவலகமும் ஒரே இடத்தில் உள்ளது. அலுவலகத்திற்கு சென்றபின்னர்தான் வீட்டிற்கு செல்லவேண்டும். அலுவலகமும் வீடும் தனித்தனியாக உள்ளது என்று 2 வது சாட்சி சாட்சியம் அளித்திருந்தார் என்றால் எனக்கு தெரியாது. 31.01.2018 அன்று ரெஜினாபீவி நபிசத்து தாஹிராவுக்கு

கொடுத்த இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் பற்றி எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் 31.01.2018 தேதியிட்ட இனாம் செட்டில்மெண்ட் டில் காணப்படுவது ரெஜினாபீவியின் கையொப்பம் ஆகும். பி.வா.சா.ஆ.4 ல் உள்ள கையெழுத்துக்கும் பி.வா.சா.ஆ–8 ல் உள்ள ரெஜினாபீவியின் கையொப்பத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. ஆனால் பி.வா.சா.ஆ.4 அவர் முடியாதபோது கையொப்பம் செய்ததால் சற்று வித்தியாசம் உள்ளது. ரெஜினாபீவி நல்ல நிலைமையில் நடை உடையுடன் பேசிக்கொண்டு இருந்தார். ஆனால் கேன்சரால் பாதிக்கப்பட்டிருந்தார். பத்திரம் எழுதிய சுமார் 6 மாதகாலத்திற்கு பின்னர் காலமாகிவிட்டார். 2 ஆண்டுகளுக்கு பின்னர்தான் அவர் காலமானார் என்றால் அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. பி.வா.சா.ஆ–4 போர்ஜரியாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

ம.வி. இல்லை.

ஒப்பம்/ஜி. விஜயா,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்